**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE,**

**PERAMBALUR.**

**S.C.25/2024**

**P.W6-டாக்டர்.ஹரிகரன்** **Dated.27.03.2026**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல்விசாரணை தொடர்ச்சி:**

காயமடைந்த நல்லதம்பி என்பவருக்கு மருத்துவ சிகிச்சையில் இருக்கும்போது எடுக்கப்பட்ட CT Scan அறிக்கை அ.சா.ஆ.12, **(எதிரிகள் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)** CT Scan படம் சா.பொ.1, CT Scan அறிக்கை படி அவருக்கு எந்தவிதமான உள்காயமும் தலைப்பகுதியில் காணப்படவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:**

CT Scanஐ எடுப்பதற்கு என்று தனியாக Techician உள்ளார். X–Ray எடுப்பதற்கு முன்பு அவருக்கு வெளிப்படையாக கொடுங்காயம் இருக்கும் விவரம் தெரியவில்லை. எலும்பு மருத்துவரின் குறிப்பின் அடிப்படையில் கொடுங்காயம் என்று நான் சான்று வழுங்கினேன். சிகிச்சைக்கு வரும்போது காயம்அடைந்தவர் தன்னை கம்பியாலும், மண்வெட்டிகழியாலும் தாக்கியதாக சொல்லவில்லை. குச்சியால் அடித்தால் எலும்புமுறிவு காயம் ஏற்பட வாய்ப்புகள் குறைவு. கத்தியால் தாக்கும்போது வெட்டுக்காயம் மற்றும் குத்துகாயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் அது தாக்கும் திசையை பொறுத்தது ஆகும். பெரும்பாலும் எலும்புமுறிவு காயங்களின் மேற்பகுதியில் வெளிபகுதியில் வீக்கம் இருக்க வாய்ப்புள்ளது. காயச்சான்றில் வீக்கம் இருந்ததாக நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் Contusion என்று குறிப்பிட்டுள்ளேன். வீக்கத்திற்கும் Contusionக்கும் பெரிய வித்தியாசம் கிடையாது. தோள்பட்டையில் வலது பின்பகுதியில் மட்டும் எலும்புமுறிவு காயம் இருந்து அதுதான் கொடுங்காயம் ஆகும். தோள்பட்டை எலும்பு சாதரணமாக சற்று கடினமான எலும்பு என்றால் சரிதான். குச்சியால் தாக்கினால் மேற்படி இடத்தில் எலும்புமுறிவு ஏற்பட வாய்ப்பு குறைவு.

**மறுவிசாரணை:**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.